**Vol. 6, Issue – 2** **Pg. No. 01 - 07**

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

***சங்கப் புறப்பாடல்களில் பாசறை அமைப்பு***

*முனைவர் பு. எழிலரசி,*

*துறைத்தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர்,*

*செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*

*ஓசூர் – 635 126*

==========================================================

*முன்னுரை:*

*சங்க காலத்தில் மக்களின் வாழ்க்கை முறையை அகம், புறம் என்று பிரித்துக்காட்டினர் புலவர்கள். அவற்றுள் அகம் மனையியலையும், புறம் அரசியலையும் குறிப்பதாக அறியப்படுகிறது. இத்தகைய அகத்தையும் புறத்தையும் கூறும் நூல்களை மேற்கணக்கு நூல்கள் என்று கூறுவர் சங்கப் புலவர்கள். புலமைக்குப் பெருமையும், மதிப்பும் இருந்த சங்ககாலத்தில், சங்கப்புலவர்களின் வாழ்வு செம்மையுடைத்தாக இருந்தது. சீர்மிகு பண்பாலும், உரிமை காரணமாகவும் மன்னனை அவன் என்றும், புலவரை அவர் என்றும்*

கூறியிருப்பதை சங்கப் பாடல்கள் வழி அறியலாம். இத்தகைய புலவர்கள் அரண்மனைச் சென்று பாடுவது மட்டுமின்றி, பகைவர் நாட்டிடத்தே பாசறை அமைத்து தங்கியிருந்த மன்னனிடமும் சென்று பாடி பரிசில்கள் பெற்றுச் சென்றுள்ளனர். இத்தகு பெருமை மிகுந்த சங்கப்பாடல்களில் புறப்பாடல்கள் கூறும் பாசறை அமைப்பு பற்றி இக் கட்டுரையில் காண்போம்.

பாசறை அமைப்பு

பகைவன் நாட்டில் போர் புரியும் மன்னன் அந்நாட்டில் தானும் தன்னுடைய படையும் தங்குவதற்காக அமைக்கும் இடமே பாசறையாகும். ஆய்ந்து கட்டிய கழலினை உடைய வேந்தனது கட்டூராகிய பாசறையானது, ஒருபக்கம் மலர் மாலையினை அணிந்த விறலியரின் ஆரவராத்துடனும், மற்றொரு பக்கம் முழங்குதலை உடைய முழவானது யாழிசையோடு ஒலிக்கும் முழக்கத்துடனும், கவிழ்ந்த மணிகளையும் சினத்திற்குக் காரணமான மதப்பெருக்கையும்உடைய போர்யானைகள் களிப்புற்று பிளிறியவையாக நிற்கும் நிலை உடையதாக இருக்கும் என்பதை,

“அவிழ்மலர்க் கோதையர் ஆட ஒருபால்

இமிழ் முழவம் யாழோடியம்பக் – கவிழ்மணிய

காய்கடா யானை ஒருபாற் களித்திரும்

ஆய்கழலான் கட்டூர் அத்து”[1]

எனவரும் பாடல் மூலம் அறியமுடிகிறது. இவற்றில் குறிக்கப்படும் “கட்டூர்” என்னும் சொல் புதியதாகக் கட்டப்பட்டுள்ள படைகள் தங்கக் கூடிய இடத்தினைக் கூறுவதாக புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

பாசறை நிலை:

மன்னன், நிறை மதியினைக் போன்ற தனது வெண்கொற்றக்குடையின் கீழாகத் தாழ்வு சொல்லியவரான பகைவேந்தர் எல்லாரும் தமது மறத்தினைக் கைவிட்டுப் பணிந்து போகவும், பாசறையாகிய கட்டூரினின்று போகாமல் அந்தப் பாடிவீட்டிலேயே இருந்த நிலைமையைக் கூறுவத பாசறை நிலையாகும்.

“ மதிக்குடைக்கீழ் வழிமொழிந்து

மன்னரெல்லாம் மறந்துறப்பவும்

*பதிப்பெயரான் மறவேந்தன்*

*பாசறையிருந்தன்று"*[2]

*எனவரும் புறப்பொருள் பாடலடிகள் பாசறை நிலையினை விளக்குவதாக அமைந்துள்ளது.*

*பாசறையில் அரசன்:*

*பகலில் போரிட்டு இரவில் போரிடாமையைப் பண்டைத்தமிழர் போர் அறமாகக் கொண்டிருந்தனர். இரவு நேரத்தில் பாசறைகளில் காயமுற்ற வீரர்களுக்கு ஆறுதல சொல்லும் அரசனின் கடமையுணர்வும், செயல்களும் விளக்கப்படுகின்றது. இதனைக் கூறுமிடத்து பாண்டியன் நெடுஞ்செழியன் வாடைக்காற்றுடன், மழைத்துளிகளும் வீழ்கின்ற இரவு நேரத்திலும் படைத்தலைவன் உதவியுடன் சென்று காயமுற்ற வீரர்களைக் கண்டு ஆறுதல் கூறினான் என்பதை நெடுநல்வாடையில்,*

*"நூல்கால் யாத்த மாலை வெண்குடை*

*தவ்வென்று அசைஇ தாதுளி மறைப்ப,*

*நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்,*

*சிலரொடு திரிதரும் வேந்தன்,*

*பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"*[3]

*என வரும் பாடலடிகள் வழி அறியலாம்.*

*இதன் மூலம் பகலில் போரிடுவதும், இரவில் போரை நிறுத்துவதும் வழக்கமாயிருந்தது என்பது அறியப்படுகிறது. பகலில் மட்டும் களம் குறித்துப் போரிடல் என்பதை,*

*"வெம்போர்ச் செழியனும் வந்தன னெதிருந்த*

*வம்ப மன்னரோ பலரே*

*எஞ்சுவர் கொல்லோ பகறவச் சிறிதே"*[4]

*என்ற புறநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றது. எனவே பகலில் போர்புரிந்தும் இரவில் பாசறை அமைத்தும் தங்கியிருந்தனர் என்பதை இதன்மூலம் அறியமுடிகிறது.*

பருவம் குறித்து போர் புரிதல்:

ஓராண்டினை ஆறுவகையான பருவங்களாகப் பகுத்துகொண்ட பண்டைத் தமிழர், போர் செய்வதற்கு உரிய பருவம் தேர்ந்தே போர் செய்தனர். போர்க்குரிய பருவங்களாகக் கூதிர்ப் பருவமும், வேனிற்பருவமும் கொள்ளப்பட்டன. இவ்விருவகைப் பருவங்களில் மன்னர்கள் போர் புரிந்தனர் என்பதனை,

"கூதிர் வேனில் என்றிரு பாசறைக்

காதலின் ஒன்றி கண்ணிய வகையினும்"[5]

என்பார் தொல்காப்பியர்.

நெடுநல்வாடை கூதிர்ப் பாசறையமைத்துத் தங்கியிருந்த வேந்தனின் போர்ச் செயல்களைக் குறிப்பிடுகின்றது. முல்லைப்பாட்டு வேனீற்பாசறை இயல்பினை விரித்துரைக்கின்றது. இவற்றால் நாட்டின் நடைமுறை நிகழ்ச்சிகள் மாறுபடாவண்ணம் பருவம் குறித்து போர்புரிந்த பண்டைத் தமிழரின் அறிவும், திறமையும் வெளிப்படுகின்றது. போரினால் ஆட்சியில் குழப்பமோ, நாட்டில் பஞ்சமோ மக்கள் செய்யும் தொழிலுக்கு தடையோ உண்டாகக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர்.

அதற்காகவே உழவுத் தொழில் செய்வோர்அறுவடையை முடித்து ஓய்வாக இருந்த கூதிர்ப்பருவம் முதல் வேனிற்காலம் வரையுள்ள இடைக்காலத்தைப் போர் புரிவதற்கு ஏற்ற காலமாக தேர்ந்தெடுத்தனர் என்பது அறிஞர்களின் கருத்து.

பாசறை வர்ணனை:

பாசறைக் குறித்து ஒவ்வொரு புலவரும் ஒவ்வொரு மாதிரி தம்முடைய பாடல்களில் வருணித்துப் பாடியுள்ளனர். மன்னர்களுக்குத் தகுந்தாற் போன்று அவர்களுடைய பாசறை அமைப்புகளும் இருந்தன என்பதை புறப்பாடல்களின் வழி அறியலாம். இளமகளிர் கூந்தலைப் போன்று அடர்த்தியான முள்வேலியால் ஆன பாசறை என்கின்றார் ஆவுர் மூலங்கிழார் புறநானூற்றில். இதேபோன்று பதிற்றுப்பத்தில் காப்பியனார் பாசறையின் அமைப்பை போற்றும் விதத்தினைக் காண்போம்.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலை, காப்பியாற்று காப்பியனார் பாடியது நான்காம் பத்தாகும். சேரமன்னன் பகைவருடைய நாடு கெடும்படியாக எல்லை இல்லாத வெள்ளம் போன்ற பெரும்படையினை உடையவன். அப்படையினில், வாட்படையானது கோட்டை மதிலாகவும், உயர்ந்த வேற்படையே

காவற்க்காடாகவும், விற்கள் விசையுடன் வெளிப்படுத்தும் கூரிய முள்ளைப் போன்ற அம்புகளும், சிவந்த முனையையுடைய பிற படைகளும் அகழியாகக் கொண்டு பாசறையை அமைத்து தங்குவான் என்றும் போற்றும் திறத்தினை,

"வாள்மதிலாக, வேள்மிளை உயர்ந்து

வில்விசை உமிழ்ந்த சைவமுள்அம்பின்

செவ்வாய் எஃகம் வளைஇய அகழின்

காரிடி உருமின் உரறு முரசின்

கார்வழங்கு ஆர் எயில் கருதின்

போர் எதிர் வேந்தர் உருஉப நின்னே"[6]

எனவரும் பாடலடிகள் விளக்கும் விதமாக அமைந்துள்ளமையை அறிய முடிகிறது.

புலாஅம் பாசறை:

பகைவரை பகற்பொழுதில் வெட்டி வீழ்த்தியதனால் குருதிக்கறை படிந்த வாள்களாலும், பகைவரைக் குத்திக் கொன்று சிறந்தபோது குருதிக்கறைப் படிந்த கொம்புகளை உடையனவாய் விளங்கும் களிறுகளாலும் பாசறையே புலால்நாற்றம் வீசியது என்கிறார் கபிலர் இதனை,

"ஈத்திரங்கான் ஈத்தொறு மகிழான்

ஈத்தொறு மாவள்ளியன் என நுவலுதின்

நல்லிசை தரவந்திசினே – ஒள்வாள்

உரவுக்களிற்றுப் புலாஅம் பாசறை"[8]

எனவரும் பதிற்றுப்பத்துப் பாடலின் வழி அறியலாம்.

பரிபாடலிலும் பாசறைப்பற்றிய செய்திகள் காணப்படுகிறது. அதாவது போருக்குச் சென்ற தலைவன் திரும்பவில்லை எனவே தலைவிக்காக, பாசறையினிடத்தே பாணன் தூது செல்லப்போவதாக அமைந்துள்ளது. இதே போன்று பாசறைப் பற்றிய செய்தி பட்டினப்பாலையிலும் இடம் பெறுகிறது.

பாசறையானது பெரும்பாலும் மிகப் பெரியதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கடல் போன்ற பாசறை என்றும், அகன்ற பாசறை என்றும், படைத்தொகுதிப் பாசறை என்றும் கூறுவதிலிருந்து அறியலாம். பாசறையானது ஆரவாரத்துடனும், வீரர்களின் மகிழ்ச்சி கோசங்களாலும், படைத் தொகுதிகளாலும் நிரம்பிக் காணப்பட்டது என்பதை புறப்பாடல்கள் வழி அறிய முடிகிறது.

மதுரை இளங்கண்ணி கௌசிகனார் தும்பைத் திணையில் பாடிய பாடலின் கருத்தில் பாசறைப்பற்றி கூறுகையில், பகைவர் படையின் ஊக்கம் கெடும்படி செய்வதற்கு வல்லான் ஒர் மாவீரனைப் பற்றி அவன் முகத்தே தோன்றும் ஓர் ஒளி பகைவரை நடுங்கச் செய்வதாயிருந்தது என்கிறார். உள்ளத்தே தறுகண்மை உடையாரது முகத்தே இத்தகைய ஒளியுண்டாதல் இயல்பான செயலாகும். இதனை,

''இரும்பு முகம் சிதைநூறி, ஒன்னார்

இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே,

நல்லராஉரையும் புற்றம் போலவும்

கொல்ஏறு திரிதரு மன்றம் போலவும்

மாற்றருந்துப்பின் மற்றோர் ''பாசறை உளன்''

என வெரூஉம், ஓர் ஒளி

வுலன் உயர் நெடுவேல் என்னைக்கண் ணதுவே''[8]

என வரும் புறப்பாடலின் வழி அறியும் கருத்தாவது,

படைக்கருவிகளின் முனைமழுங்கப் பகைவரைத் தாக்கிக் கொன்று குவித்துப் போரிட்டு போரிலே வெல்லுதல் ஏனையோர்க்கும் எளிதேயாகும். அதனால் நல்லபாம்பு வாழும் புற்றைப் போலவும், கொல்லேறு திரிகின்ற மன்றம் போலவும் வலியுடைய மாற்றாரும் இவன் பாசறையின் கண் உள்ளான் என எண்ணி வெருவி நடுங்குகின்றனரே. அத்தகைய புகழானது வெற்றி வேலினை உயர்த்தும் எம்தலைவன் ஒருவனிடமேதான் உள்ளதாகும் என்பதை அறியலாம்.

முடிவுரை

மனிதர் வாழ்ந்த விதத்தை உணர்த்தும் இலக்கியம், வாழவேண்டிய நெறியினையும் காட்டவல்லது. மேற்கண்ட கட்டுரையானது சங்க புறப்பாடல்களில் இடம்பெறும் போர்ப்பாடல்களில், பாசறையின் அமைப்பு, பாசறையின் நிலை, பாசறை எவ்வாறு அமைக்கப்படுகிறது. பாசறையில் மன்னன்நிலை வீரர்களின் நிலை போன்றவற்றை விளக்கும் விதமாக அமைந்துள்ளது.

*சான்றெண் விளக்கம்:*

1. புறப்பொருள் வெண்பாமாலை – பாடல் எண்.53
2. மேலது - நூற்பா எண்.20
3. நெடுநல்வாடை - பாடல் வரிகள்.184-188
4. புறநானூறு - பாடல் எண் 79
5. தொல்காப்பியம் - நூற்பா எண்.75
6. பதிற்றுப்பத்து - பாடல் எண்.23
7. மேலது - பாடல் எண்.61
8. புறநானூறு - பாடல் எண் 397